**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.66/2015**

(TNTM03000283/2015)

R.சிவகாமி ... வாதி

... எதிர் ...

1. R.கண்ணன்(இறந்தவர்)
2. K.பச்சையம்மாள்
3. K.பட்டு
4. K.வேலு
5. K.உண்ணாமலை
6. K.வசந்தா
7. P.வேண்டா ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 23.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ரமேஷ்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.மார்கபந்து,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார். இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

தாவா அடமான கடன் அசல் மற்றும் வட்டி தொகை ரூ.2,28,000/–ம் மற்றும் அசல் தொகை ரூ.60,000/–த்திற்கு தொகை வசூலாகும் வரை 24% பின் வட்டியும், செலுத்த வேண்டும் என்று முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், இவ்வழக்கின் செலவுத் தொகை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காகும்.

**1. வழக்குரையின் சுருக்கம்:**

பிரதிவாதியை வாதிக்கு நன்கு தெரியும், அதன் அடிப்படையில், பிரதிவாதி, வாதியை அனுகி பிரதிவாதி பிற நபர்களுக்கு செலுத்தவேண்டிய கடனை தீர்ப்பதற்காக அவசர

தேவைக்காக வாதியிடமிருந்து 07.08.2023ம் தேதி ரூ.60,000/−த்தை கடனாக பெற்றுக்கொண்டு 24% ஆண்டு வட்டியுடன் கடனை திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு தாவா சொத்தை பொறுத்து அடமான ஆவணம் எழுதிக்கொடுத்தார். வாதி, பிரதிவாதியிடம் அடமான கடனை வட்டியுடன் திருப்பி செலுத்தும்படி பலமுறை கேட்டார். பிரதிவாதி கடனை திருப்பி செலுத்தவில்லை. வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அடமான கடனை திருப்பி செலுத்தும்படி கேட்டு 12.04.2012 தேதியில் அறிவிப்பு அனுப்பினார். அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிறகு பிரதிவாதி, வாதியை அனுகி கடனை வட்டியுடன் செலுத்த கால அவகாசம் கேட்டார். ஆனால் 2 வருட காலம் முடிந்த பிறகும் பிரதிவாதி அசலையோ, வட்டியையோ செலுத்தவில்லை. வாதி மீண்டும் 09.10.2014 மற்றும் 30.01.2015 ஆகிய தேதிகளில் அறிவிப்பு அனுப்பினார். அந்த அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்ட பிறகும் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. கடனையும் திருப்பி செலுத்தவில்லை. பிரதிவாதிக்கு ரூ.10,00,000/−ம் மதிப்புடைய அசையா சொத்து உள்ளது. எனவே தமிழ்நாடு கடன் நிவாரண சட்டம் பிரதிவாதிக்கு பொருந்தாது. எனவே வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் இருக்கும்போது பிரதிவாதி கண்ணன் இறந்துவிட்டார். அவரது வாரிசுகள் இவ்வழக்கில் 2 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

**<u>2. பிரதிவாதியின்(கண்ணன்) எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

வாதியின் தாவா சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. தாவா 1ம் பத்தியில் விவரித்த சங்கதிகள் யாவும் உண்மையல்ல. இப்பிரதிவாதிக்கு ஏதோ அவருக்கு பண உதவி தேவைப்பட்டதாகவும், இன்னும் பிரதிவாதி அவரது கடனை அடைக்க அடமானப் பத்திரம் ஏற்படுத்தினார் என்பதும் உண்மையல்ல. தாவா அடமானப் பத்திரத்திற்காக வாதி, இப்பிரதிவாதிக்கு தொகை ஏதும் கொடுக்கவில்லை. வாதி, இப்பிரதிவாதியை மிரட்டி சூதுமார்கமாகவும், அவரை நிர்பந்தித்து (coercion) மித மிஞ்சிய influence, undue−influence− மூலம் இப்பிரதிவாதியை ஏமாற்றி நயவஞ்சகமாக எவ்வித பிரதிவாதி பிரதிபலனும் இல்லாமல் மோசவிதமாக தாவா அடமான பத்திரத்தினை பெற்றார். வாதியும் அவரது ஆட்களும் இப்பிரதிவாதியிடம் வந்து அவரை மோசவிதமாக மிரட்டி, பிரதிவாதியின் மகன் கே.வேலு என்பவர் அவர் சொத்தினை விற்க ஒப்பி ரூ.10,000/−மும் பின்னர் மேலும் ரூ.50,000/− பெற்றதாகவும், அந்த வகையில் அந்த தொகையை கே.வேலு கொடுக்க வேண்டி இருந்தது என்பதும் அந்த தொகைக்கு இப்பிரதிவாதி பொறுப்பேற்க வேண்டும் என நிர்பந்தித்து இப்பிரதிவாதியை மிரட்டி அவர் சம்மதம் இல்லாமல் இருந்தும் அவரிடமிருந்து Fraudulent ஆக தாவா அடமான பத்திரத்தில் கையெழுத்து பெறப்பட்டது. அசல் தொகை மட்டுமே திருப்பி தரவேண்டும் என வாதி பிரதிவாதிக்கு ஓர் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துவிட்டு, அடமான பத்திரத்தில் ஒப்பிய 24% வீதம் வட்டி எனவும் முன்னுக்குப் பின்னாக முரணாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி அடமான பத்திரம் சட்டத்திற்கு முரணானது ஏற்க முடியாது. வாதி, இப்பிரதிவாதி

ஏதாவது தொகை செலுத்த வேண்டுமென்று பட்டாலும், அதனை பெற அவர் பேரில் தாவா தொடரவேண்டுமே ஒழிய இப்பிரதிவாதி பெயரில் அல்ல. இப்பிரதிவாதிக்கு தாவா நிலம் பாத்தியம். எனவே அவர் விவசாயி என்பது தெளிவு. எனவே 9% வீதம் மட்டுமே வட்டி கோர முடியும் அப்படி இருக்க ஒப்பந்த வட்டி கோரி எந்த வகையில் தாவா தொடர முடியும். அதுமட்டுமல்லாமல் வாதியே இப்பிரதிவாதி பேருக்கு 07.08.2003ல் ஓர் ஒப்பந்த முச்சிலிக்கா ஏற்படுத்தி தாவா அசலுக்கு வட்டி கொடுக்க வேண்டியதில்லை என ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு வட்டி கோருவதில் Estoppel ஆகும்.

3. இப்பிரதிவாதி வயதானவர் என்பதால், அவருக்கு தாவா சொத்து மூலம் ஜீவிதம் என்பது தெரிந்தும் இந்த சொத்தினை மோசவிதமாக அடைய எண்ணமிட்டு வாதி, பிரதிவாதியை மிரட்டி மோசவிதமாக அவரை ஏமாற்றி பெற்ற தாவா அடமானப் பத்திரம் எந்தவிதத்திலும் செல்லாது. அது சட்டப்படிக்கு செல்லாது. வாதி வக்கீல் நோட்டீசு கொடுத்து மோசவிதமாக ஏற்படுத்திய அடமானம் குறித்து கேட்டார். ஆனால் மேற்படி அடமானம் மோசவிதமாக பெறப்பட்டது என்பதால் அது செல்லாது என்பது நிதர்சனமான உண்மை. அதற்கான ஆவணங்களை கோர்ட்டில் இப்பிரதிவாதி சமர்ப்பிக்க உள்ளார். இப்பிரதிவாதி விவசாயி. எனவே ஆக்ட் 8/1973ன் படி 9% வீதம் மட்டுமே வட்டி கோர முடியும். தாவா பிரிவு 149 சி.பி.சி. படிக்கு அனுமதி பெறாமல் பெற்ற தாவா செல்லாது. ஏற்க முடியாதது ஆகிறது. வாதியே வட்டி கோர மாட்டேன் என ஓர் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துவிட்டு, வட்டி கோருவதில் இருந்து எஸ்டாப்பல் ஆகிறார். எனவே வாதி தாவா அடமானப் பத்திரம் மூலம் தொகை ஏதும் கோர முடியாது என தீர்மானம் செய்து வாதியின் தாவாவினை இப்பிரதிவாதியின் செலவுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

**4 2 முதல் 5 மற்றும் 7 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையின் சுருக்கம்:**

வாதியின் தாவா சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. தாவா 1ம் பத்தியில் விவரித்த சங்கதிகள் யாவும் உண்மையல்ல. 1ம் பிரதிவாதிக்கு ஏதோ அவருக்கு பண உதவி தேவைப்பட்டதாகவும், எனவே 1ம் பிரதிவாதி அவரது கடனை அடைக்க அடமானப்பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தார் என்பது உண்மையல்ல. வாதி 1ம் பிரதிவாதிக்கு தாவா அடமானப் பத்திரத்திற்காக தொகை ஏதும் செலுத்தவில்லை. உண்மையில் 1ம் பிரதிவாதியின் குமாரர் ஆன 2ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட களம்பூர் சப்–டிஸ்ட்ரிக்டைச் சேர்ந்த சர்க்கார் புஞ்சை சர்வே எண்.1164/1எ–0.84 ஆஸ்பத்திரி தெரு எண்.51எ உள்ள ஆர்.சி.சி. தளம்போட்ட மெத்தை மாடி வீட்டிற்கு மின் இணைப்பு எண்.1280 டிபாசிட் உள்பட குடிநீர் குழாய் உள்பட இதன் ஜக்பந்தி சின்னம்மாள் வீட்டிற்கு (கிழக்கு) முருகன், காசி, சக்கரை வீட்டிற்கு (மேற்கு) ஆஸ்பத்திரி வீதிக்கு (வடக்கு) கொழந்தாங்கல் ஏரிக் கால்வாய்க்கு (தெற்கு) இதன் மத்தியில் கிழக்கு–மேற்கு 22 அடி, வடக்கு–தெற்கு 70 அடி ஜாகாவினை இந்த அளவுள்ள அடிமனையும் இதில் கட்டியுள்ள ஆர்.சி.சி. மெத்தை கட்டிடத்தினையும்

சேர்த்து வாதிக்கு 31.05.2003 தேதியில் ரூ.96,000/–க்கு கிரையம் ஒப்பி முன்பணமாக ரூ.10,000/– பெற்று மீதத் தொகையை மூன்று மாத கெடுவுக்குள் பணம் செலுத்தி கிரையப் பத்திரம் பதிவு செய்து கொள்ள இருசாரரும் ஓர் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டார்கள். பின்னர், மேலும் ரூ.50,000/– பெற்றுக் கொண்டதாகவும், அந்த வகையில் 2ம் பிரதிவாதி கொடுக்க வேண்டி வருகிறது என்றும், அந்த தொகைக்கு 2ம் பிரதிவாதியின் தகப்பனார் பொறுப்பேற்க வேண்டும் என்றும், 1ம் பிரதிவாதியை நிர்பந்தித்து அவரை மிரட்டி அவர் சம்மதம் இல்லாமல் அவரை நிர்பந்தப்படுத்தி 1ம் பிரதிவாதியிடம் ரூ.60,000/–க்கு சூசகமாக 24% ஆண்டு வட்டி வீதம் வட்டி கொடுக்க வேண்டும் என வாசகம் ஏற்படுத்தி 1ம் பிரதிவாதியிடம் கையெழுத்து போட வைத்தார்கள். அந்த அடமானப் பத்திரத்தினை ராட்டிணமங்கலம் பிச்சாண்டி எழுதினார். அதில் சாட்சிகளாக ராட்டிணமங்கலம் முன்னாள் தலைவர் அண்ணாமலையும், இப்பிரதிவாதியும் இன்னும் ஆறுமுகம் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தார்கள். மேற்படி நபர்களுக்கு வீடு அடமான பத்திரத்திற்கு தொகை ஏதும் கொடுக்கவில்லை என்பது நன்கு தெரியும்.

5. எது எப்படி இருப்பினும் அடமானப் பத்திரம் ஏற்படுத்திய தேதியில் வாதியும், 1ம் பிரதிவாதியும் ஓர் அடமானம் ஒப்பந்த முச்சுலிகா ஏற்படுத்தி கொண்டார்கள். அதன்படி அடமான பாக்கிக்கு வட்டி கோரக்கூடாது என்பதும் அதில் வாதியும், 1ம் பிரதிவாதியும் ஒப்பந்ததத்தில் கையெழுத்து செய்தார். அந்த முச்சிலிகாவில் தலைவர் அண்ணாமலையும், பஞ்சாட்சரம் ஆகியோரும் சாட்சியம் செய்துள்ளார்கள். வாதியின் அண்ணன் வேங்கப்பனும் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார்கள். அந்த முச்சிலிகாப்படி வட்டி கோரக்கூடாது என ஒப்பப்பட்டது. மேற்படி ஏற்பாடுகள் யாவும் இவர் சகோதரிகளான 2ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதி, 5ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதி, 7ம் பிரதிவாதி மற்றும் இப்பிரதிவாதிக்கும் தெரியும். எனவே, தாவா அடமான பத்திரத்திற்கு வட்டி கோர முடியாது. 1ம் பிரதிவாதி விவசாயி என்பதால் 6% ஆண்டு வட்டி கோர முடியும். தாவா அடமானப் பத்திரத்திற்கு வாதி எந்த தொகையும் செலுத்தவில்லை. எனவே தாவா தள்ளுபடி செய்யவேண்டும். பிரிவு 149 சி.பி.சி.ன் படி மனு போட்டு காலதாமதத்திற்கு மன்னிப்பு கோரி மனு தொடரவில்லை. எனவே, தாவா காலாவதி ஆன ஒன்று என்று பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள்.

6. <u>**வாதி தரப்பு வாதுரையின் சுருக்கம்:**</u>

பிரதிவாதி, வாதியிடமிருந்து ரூ.60,000/– கடன் பெற்றுக்கொண்டு ஆண்டுக்கு 24% வட்டி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு வழக்கு சொத்தை பொறுத்து 07.08.2023ம் தேதி வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட அடமான ஆவணத்தை எழுதிக்கொடுத்தார். அடமான கடனை வட்டியுடன் திருப்பி செலுத்தும்படி வாதி, பிரதிவாதியிடம் கேட்டார். பிரதிவாதி கடனை திருப்பி செலுத்ததால் வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 வரையிலான அறிவிப்புகளை பிரதிவாதிக்கு அனுப்பினார். வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி

பெற்றுக்கொண்டு அசல் மற்றும் வட்டியை செலுத்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், வாதியிடம் கடன் வாங்கவில்லை என்றும், பிரதிவாதியின் மகன் வேலு என்பவர் அவருடைய சொத்தை விற்க ஒப்புக்கொண்டு வாதியிடமிருந்து பெற்ற தொகையை வசூல் செய்யவேண்டி இந்த பிரதிவாதியை மிரட்டி அவர் சம்மதம் இல்லாமல் தாவா அடமான ஆவணம் எழுதி வாங்கப்பட்டதாகவும் அதே தேதியில் அடமான கடனுக்கு வட்டி தேவையில்லை என்ற ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கப்பட்டதாகவும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது பிரதிவாதி கண்ணன் இறந்துவிட்டார். அவரின் வாரிசுகள் 2 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். 2முதல் 7 பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில், 4ம் பிரதிவாதியின் சொத்தை கிரையம் வாங்க வாதி ஒப்பந்தம் போட்டார். அந்த ஒப்பந்தத்தில் ரூ.50,000/–ம் செல் வரவு வைக்கப்பட்டது. அந்த தொகையை பெறுவதற்காக 1ம் பிரதிவாதியை நிர்பந்தித்து மிரட்டி அடமான ஆவணம் எழுதி வாங்கப்பட்டது. வட்டி இல்லை என்று ஒப்பந்த முச்சிலிகா எழுதப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி விவசாயி என்தால் 6% வட்டி மட்டுமே கோரமுடியும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. வாதி தனது குறுக்கு விசாரணை சாட்யித்தில், வேலு என்பவர் அடமானம் எழுதிக்கொடுக்கவில்லை. கண்ணன் என்பவர் தான் எனக்கு அடமானம் எழுதிக்கொடுத்தார். வட்டி தேவையில்லை என்று வேறு ஒரு ஆவணம் எழுதிக்கொடுக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அடமான ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள வா.சா.2 தனது சாட்சியத்தின் மூலம் கண்ணன் என்பவர் பணம் வாங்கிக்கொண்டு அடமான ஆவணம் எழுதிக்கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். 4ம் பிரதிவாதியான பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், நான் சொல்லிதான் எனது அப்பா வா.சா.ஆ.1ல் கையொப்பம் போட்டார் என்றும், அடமான ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பம் தன்னுடையது என்று ஒப்புக்கொண்டுள்ளார். எனவே தாவா அடமான ஆவணம் வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

9. வாதி தரப்பில் அனுப்பப்பட்ட அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டார் என்பதையும், அதற்கு எனது தகப்பனார் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்பதையும் பி.வா.சா.1 ஒப்புக்கொண்டுள்ளார். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் வாதியின் கையொப்பம் இல்லை. பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆகியவற்றை பத்திர எழுத்தர் முனியாண்டி என்பவர் எழுதவில்லை என்று தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். பி.வா.சா.ஆ.3 ஒப்பந்தம் முச்சிலிக்கா ஆவணத்தை முனியாண்டி என்பவர் எழுதியதாக பி.வா.சா.3

முனியாண்டி முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். ஆனால் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் அவரது கையொப்பம் இல்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். ஒப்பந்த முச்சிலிக்கா எழுதும்போது யார் யார் இருந்தார்கள் என்ற கேள்விக்கு தெரியாது என்று பதில் அளித்துள்ளார். எனவே பி.வா.சா.ஆ.3 ஒப்பந்த முச்சிலிக்கா பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.3ன் மூலம் எழுதப்படவில்லை என்று நிரூபணம் ஆகிறது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள அண்ணாமலை தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ஒப்பந்த முச்சிலிக்காவில் தனது கையொப்பம் இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளார். ஒப்பந்த முச்சிலிக்காவை முனியாண்டி எழுதவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளார். அடமான ஆவணம் வா.சா.ஆ.1 எழுதப்பட்ட அன்றே பி.வா.சா.ஆ.3 எழுதப்பட்டதா என்ற கேள்விக்கு அதன்பிறகு எழுதியிருக்கலாம் என்று சாட்சியம் அளித்திருக்கிறார். பி.வா.சா.ஆ.3 பிரதிவாதி தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. அடமான ஆவணம் எழுதும்போதே அசல் மட்டும் கொடுத்தால் போதும் என்று, அதே ஆவணத்தில் எழுத வாய்ப்புள்ளது என்றும், வட்டி தேவையில்லை என்றும் தனியாக பி.வா.சா.ஆ.3 எழுதவேண்டிய அவசியம் இல்லை. தாவா அடமான ஆவணம் வாதியால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. அடமான கடன் திருப்பி செலுத்தப்படவில்லை என்பதும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே வாதியின் வழக்கை அனுமதிக்கவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டுள்ளது.

<u>10. பிரதிவாதிகள் தரப்பு வாதுரையின் சுருக்கம்:</u>

தாவா அடமான ஆவணத்தை 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்தார். வழக்கு நிலுவையில் இருந்தபோது 1ம் பிரதிவாதி இறந்து விட்டார். அவரது வாரிசுகள் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். வழக்குரையின் 5வது பத்தியில் 1ம் பிரதிவாதிக்கு ரூ.10,00,000/−ம் மதிப்புடைய அசையா சொத்து உள்ளது என்றும், அதனால் தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம் அவருக்கு பொருந்தாது என்று விவரம் கூறப்பட்டுள்ளது, ஆனால், வாதி தரப்பில், பிரதிவாதிக்கு ரூ.10,00,000/−ம் மதிப்புடைய சொத்து இருந்தது என்பதை நிரூபணம் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.1 ஆனது 4ம் பிரதிவாதிக்கும், வாதிக்கும் ஏற்பட்ட கிரைய ஒப்பந்தமாகும். அந்த கிரைய ஒப்பந்தத்தில் ரூ.50,000/− வரவு வைக்கப்பட்டு எழுதப்பட்டுள்ள பகுதி பி.வா.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரைய ஒப்பந்தத்தின் அட்வான்ஸ் தொகையை திருப்பிக் கொடுக்க முடியாததால், 1ம் பிரதிவாதியை வற்புறுத்தி மிரட்டி வா.சா.ஆ.1 அடமான பத்திரம் எழுதி வாங்கப்பட்டது. அதே தேதியில் கடன் அடமான ஆவணத்திற்கான தொகைக்கு வட்டி தேவை இல்லை என்று ஒப்பந்த முச்சிலிக்கா எழுதப்பட்டது. அது பி.வா.சா.ஆ.3ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடமானத் தொகைக்கு வட்டி இல்லை என்பது சாட்சிகள் மூலமும், முச்சிலிக்கா ஒப்பந்தம் மூலமும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. வட்டி இல்லை என்ற ஒப்பந்த முச்சலிக்காவில் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் கையொப்பம் உள்ளது. வா.சா.ஆ.1 அடமான பத்திரம் எழுதப்பட்டுள்ள

முத்திரைத்தாள் எண்.9591 என்று உள்ளது. பி.வா.சா.ஆ.3 ஒப்பந்த முச்சலிக்கா எழுதப்பட்ட முத்திரைத்தாள் 9599 என்று உள்ளது. இரண்டு முத்திரைத்தாள்களும் ஒரே முத்திரைத்தாள் விற்பனையாளரிடம் வாங்கப்பட்டுள்ளது. எனவே, பி.வா.சா.ஆ.3 அடமான ஆவணம் எழுதப்பட்ட அதே தேதியில் எழுதப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே, அடமான கடனுக்கு வட்டி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. பி.வா.சா.ஆ.3 ஒப்பந்தம் முச்சலிக்காவை நிரூபணம் செய்ய அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ள பி.வா.சா.2 விசாரிக்கப்பட்டுள்ளார். ஒப்பந்த முச்சிலிக்காவை எழுதிய பி.வா.சா.3 சாட்சியமளித்துள்ளார். இருவரும் தங்களது சாட்சியத்தில் ஒப்பந்த முச்சிலிக்காவிலுள்ள கையொப்பம் தங்களுடையது என்று ஒப்புக்கொண்டுள்ளார்கள். பி.வா.சா.ஆ.3 பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அதனை ஏற்க முடியாது என்று கூறுவது ஏற்புடையதல்ல. பி.வா.சா.ஆ.3னை எழுதிய பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.3 நான்தான் அந்த ஆவணத்தை எழுதினேன் என்று ஒப்புக்கொண்டுள்ளார். ஒரே தேதியில் வா.சா.ஆ.1ம், பி.வா.சா.ஆ.3ம் எழுதப்பட்டுள்ளது.

11. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் 5வது பத்தியில் தான் ஒரு விவசாயி என்றும், 9% வட்டி மட்டுமே கோரமுடியும் என்றும் கூறியுள்ளார்.வா.சா.ஆ.1ன் முதல் பக்கத்தில் 1ம் பிரதிவாதியின் பெயர் குறிப்பிடப்பட்டு பயிர் ஜீவனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, 9% வட்டி மட்டுமே வாதி பெற முடியும். கடன் நிவாரண சட்டம் பிரிவு 13 இன் படியும், புதிய சட்டம் 40/1979 சட்டத்தின் படியும், 1ம் பிரதிவாதி விவசாயி என்பதால் அவர் 24% வட்டி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. 9% வட்டி மட்டுமே வாதி கோர முடியும். 10 லட்சம் மதிப்புடைய சொத்து இருக்கிறது என்பதை வாதித்தரப்பில் நிரூபணம் செய்யவில்லை. எனவே, நிவாரண சட்டப்படி குறைந்தபட்ச வட்டி மட்டுமே வாதி பெற முடியும் என்று கூறி பிரதிவாதிகள் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது

12. வாதியின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையிலிருந்து இவ்வழக்கை தீர்வு காண 20.01.2016ம் தேதி பின்வரும் எழுவினாக்கள் வனையப்பட்டது.

1. வாதி வழக்குரையில் கோரியுள்ள ரூ.2,28,000/-னை பின்வட்டியுடன் பிரதிவாதியிடமிருந்து பெற முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கவியலுமா?

2. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

13. வாதி தரப்பில், வாதி வா.சா.1, திருமதி.சிவகாமி, வா.சா.2 திரு.ஆறுமுகம் ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். 07.08.2003 தேதியிட்ட வாதி பெயருக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமானப்பத்திரம் அசல் வா.சா.ஆ.1, 12.04.2012 தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.2, 09.10.2014 தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.3, 30.01.2015

தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.4, 20.02.2015 தேதியிட்ட வழக்கறிஞர் வேலூர் சத்துவாச்சாரி அஞ்சல் துறை அதிகாரியிடம் கொடுத்த புகார் மனு நகல் வா.சா.ஆ.5, 20.02.2015 தேதியிட்ட மேற்படி அறிவிப்புக்கு கொடுத்த பதில் நகல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14. பிரதிவாதிகள் தரப்பில், 4ம் பிரதிவாதி பி.வா.சா.1 திரு.கே.வேலு, பி.வா.சா.2 திரு.அண்ணாமலை, பி.வா.சா.3 திரு.முனியாண்டி ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். 03.05.2003 தேதியிட்ட உடன்படிக்கை ஒப்பந்தம் அசல் பி.வா.சா.ஆ.1, 09.06.2003 தேதியிட்ட ரூ.50,000/–ற்கு வைக்கப்பட்ட செல் பி.வா.சா.ஆ.2, 07.08.2003 தேதியிட்ட அடமான ஒப்பந்த முச்சிலிக்கா பி.வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15. <u>எழுவினா–1 ற்கான தீர்வு.</u>

1. வாதி வழக்குரையில் கோரியுள்ள ரூ.2,28,000/–னை பின்வட்டியுடன் பிரதிவாதியிடமிருந்து பெற முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கவியலுமா?

வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில், பிரதிவாதிக்கு, வாதியை நன்றாக தெரியும் என்ற அடிப்படையில் பிரதிவாதி, வாதியிடம் தனது அவசர பண தேவைக்காகவும் மற்ற கடன்களை அடைப்பதற்காக ரூ.60,000/–த்தை வாதியிடம் கடனாக பெற்றுக்கொண்டு 07.08.2003 ஆம் தேதி தாவா சொத்தை அடமானம் செய்து அடமான ஆவணம் எழுதிக் எழுதிக் கொடுத்தார். அடமான கடனுக்கு 24% ஆண்டு வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு அடமான ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டது. அதன் பிறகு அசல் மற்றும் வட்டியை பிரதிவாதி செலுத்தாததால் வட்டி மற்றும் அசலை திருப்பி செலுத்தும் படி 12.04.2012, 09.10.2014, 30.01.2015 ஆகிய தேதிகளில் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அறிவிப்புகளை பெற்றுக்கொண்டும் பிரதிவாதி கடனை திருப்பி செலுத்தவில்லை. எனவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

16. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், வாதியிடம் கடன் வாங்கவில்லை என்றும், பிரதிவாதியின் மகன் வேலு என்பவர் அவருடைய சொத்தை விற்க ஒப்புக்கொண்டு வாதியிடமிருந்து பெற்ற தொகையை வசூல் செய்யவேண்டி இந்த பிரதிவாதியை மிரட்டி அவர் சம்மதம் இல்லாமல் தாவா அடமான ஆவணம் எழுதி வாங்கப்பட்டதாகவும் அதே தேதியில் அடமான கடனுக்கு வட்டி தேவையில்லை என்ற ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கப்பட்டதாகவும், பிரதிவாதி விவசாயி என்பதால் 9% வட்டி மட்டுமே கோரமுடியும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது பிரதிவாதி கண்ணன் இறந்துவிட்டார். அவரின் வாரிசுகள் 2 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

17. 2முதல் 7 பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில், 4ம் பிரதிவாதியின் சொத்தை கிரையம் வாங்க வாதி ஒப்பந்தம் போட்டார். அந்த ஒப்பந்தத்தில் ரூ.50,000/–ம்

செல் வரவு வைக்கப்பட்டது. அந்த தொகையை பெறுவதற்காக 1ம் பிரதிவாதியை நிர்பந்தித்து மிரட்டி அடமான ஆவணம் எழுதி வாங்கப்பட்டது. வட்டி இல்லை என்று ஒப்பந்த முச்சிலிகா எழுதப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி விவசாயி என்தால் 6% வட்டி மட்டுமே கோரமுடியும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

18. வாதி வா.சா.1 ஆக தனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளார். அடமான ஆவணம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், வாதி தரப்பில் அடமான கடனை கேட்டு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்புகள் வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அறிவிப்புகளை 1ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டும் தாவா கடனை திருப்பி செலுத்தாததால், வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார். தாவா அடமான ஆவணமான வா.சா.ஆ.1ல் சாட்சி கையொப்பம் செய்துள்ள வா.சா.2 ஆறுமுகம் தனது சாட்சியத்தில், தாவா அடமான பத்திரத்தை வாதிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்தார். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். ரூ.60,000/-ம் பெற்றுக்கொண்ட பிறகு தான் வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ1ல் கண்ணன் கையொப்பம் செய்தார். அவர் கையொப்பம் செய்ததை நானும் மற்ற சாட்சிகளும் பார்த்த பிறகு தான் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். கண்ணனை நாங்கள் மிரட்டி அடமான பத்திரம் எழுதி வாங்கினோம் என்றால் சரியல்ல. தொழில் செய்வதற்காக வேண்டி அடமான கடன் பெற்றார். வா.சா.ஆ.1 அடமான பத்திரம் உண்மையான பிரதிபலனுக்கு ஏற்பட்டது தான் என்று கூறியிருக்கிறார். வா.சா.2ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, கண்ணனின் மருமகன் தான் என்னை சாட்சி கையொப்பம் செய்ய அழைத்து வந்தார். முதலில் ராட்டினமங்கலம் கிராமத் தலைவர் சாட்சி கையொப்பம் செய்தார். வேலு சாட்சி கையொப்பம் செய்தார். வெளியில் பணத்தை வாங்கிக்கொண்டு தான் தலைவரும், வேலுவும் சார்பதிவு அலுவலகத்திற்குள் சென்றார்கள். நான் அலுவலகத்தின் உள்ளே செல்லவில்லை. அடமான பத்திரத்திற்கு பணம் எதுவும் தரவில்லை என்றால் சரியல்ல கொடுத்தார்கள். ரூ.500/- ரூபாய் நோட்டுகளாக கொடுத்தார்கள் என்று சாட்சியம் அளித்திருக்கிறார்.

19. இவ்வழக்கின் 4ம் பிரதிவாதியான வேலு வா.சா.ஆ.1ல் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். 1ம் பிரதிவாதியின் மகனான 4ம் பிரதிவாதி வேலு நீதிமன்றத்தில் பி.வா.சா.1ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், நான் விவரம் சொல்லி தான் என் தகப்பனார் கையொப்பம் போட்டார். தாவா சொத்து எனது தகப்பனாருக்கு சொந்தமானது. வழக்கு சொத்து வாதிக்கு அடமானம் போடப்பட்டுள்ளது. அடமானம் போடும்போது நான் உடன் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் அடமான பத்திரத்தில் உள்ள கையொப்பம் எனது தகப்பனார் கையொப்பம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் அடமான பத்திரத்தில் போட்டுள்ள 2வது பக்கத்தில் உள்ள 2வது கையொப்பம் மற்றும் கடைசி தாளிலுள்ள

3வது சாட்சி கையொப்பமும் என்னுடையது தான். வா.சா.ஆ.1ல் உள்ள விபரங்களை நான் படித்து பார்த்து என் தகப்பனாருக்கு சொன்ன பிறகு தான் அதில் என் தகப்பனார் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அடமான கடன் தொகை கேட்டு வாதி சிவகாமி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியும். அந்த அறிவிப்புக்கு என் தகப்பனார் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

20. வா.சா.ஆ.1 அடமான பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள மற்றொரு சாட்சியான அண்ணாமலை பி.வா.சா.2ஆக சாட்சியமளித்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், வா.சா.ஆ.1 அடமான பத்திரத்தில் 1ம் பிரதிவாதி, வாதி சிவகாமியிடம் ரூ.60,000/-ம் கடன் வாங்கிக்கொண்டு ஆவணம் எழுதிக்கொடுத்ததாக விவரம் உள்ளது என்றால் சாட்சி அந்த ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு ஆமாம் என்று சொல்கிறார். அதே ஆவணத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு வட்டி ரூ.2/- வீதம் வருடா வருடம் செலுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் தான் முதல் சாட்சி கையொப்பம் செய்திருப்பதாகவும், என்னுடன் பத்திர எழுத்தர் முனியாண்டி என்பவர் சாட்சி போட்டார். 2வது சாட்சியாக 1ம் பிரதிவாதியின் மகன் 4ம் பிரதிவாதியான வேலு சாட்சி கையொப்பம் செய்து இருக்கிறார் என்று கூறி சாட்சியம் அளித்திருக்கிறார்.

21. தாவா அடமான ஆவணத்தை எழுதிய பத்திர எழுத்தர் முனியாண்டி என்பவர் பி.வா.சா.3ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், வா.சா.ஆ.1 அடமான பத்திரத்தை நான்தான் எழுதினேன். கண்ணன் என்பவர் வாதி சிவகாமிக்கு அந்த பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளார். ரூ.60,000/-த்தை வாதியிடம் குடும்ப செலவுகளை பைசல் செய்வதற்காக கண்ணன் கடனாக வாங்கிக்கொண்டு அந்த பத்திரத்தை எழுதிக்கொடுத்தார். மாதம் 1க்கு ரூ.100/-க்கு வட்டி ரூ.2/- வருடா வருடம் செலுத்துவதாக விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

22. வா.சா.ஆ.1 ஆன அடமான ஆவணத்தை எழுதிய பி.வா.சா.3ம் அடமான ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள பி.வா.சா.2 அண்ணாமலையும் வா.சா.ஆ.1ல் சாட்சி கையொப்பம் செய்துள்ள 1ம் பிரதிவாதியின் மகனான 4ம் பிரதிவாதி வேலுவும், தாவா அடமான ஆவணம் 1ம் பிரதிவாதி கண்ணனால் எழுதிக்கொடுக்கப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்கள். வா.சா. 2 தனது சாட்சியத்தின் மூலம் வாதியிடம் ரூ.60,000/-ம் கடன் தொகை பெற்றுக்கொண்டு கண்ணன் அடமான ஆவணம் எழுதிக்கொடுத்ததாக கூறியிருக்கிறார். மேற்படி நபர்களின் சாட்சியத்தின் அடிப்படையில் வா.சா.ஆ.1ஆனது ரூ.60,000/-ம் கடனுக்காக பிரதிவாதி கண்ணனால் வாதி சிவகாமிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

23. பிரதிவாதிகளின் எதிர்வழக்கு என்னவென்றால், தாவா அடமான ஆவணம் மிரட்டி வற்புறுத்தி எழுதி வாங்கப்பட்டது என்பதாகும். பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஆக சாட்சியமளித்துள்ள 4ம் பிரதிவாதி வேலு தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், வா.சா.ஆ.1ல் உள்ள விவரங்களை நான் படித்துப் பார்த்து சொன்ன பிறகு தான் என் தகப்பனார் கையொப்பம் செய்தார் என்று தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ஒப்புக் கொண்டுள்ளார். பி.வா.சா.2 ராட்டிணமங்கலம் கிராமத்தின் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆவார். அவரும் வா.சா.ஆ.1 அடமான ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், அடமான ஆவணம் மிரட்டி எழுத வாங்கப்பட்டதாக கூறவில்லை. வாதி தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட நிலையில், தாவா அடமான ஆவணம் வற்புறுத்தி மிரட்டி எழுதி வாங்கப்பட்டதாக விவரம் கூறி பிரதிவாதி தரப்பில் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. வா.சா.ஆ.1 ஆனது 07.08.2003ல் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் அறிவிப்பு முதலில் 12.04.2012ல் அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிவிப்புக்கு பிறகும் வா.சா.ஆ.1 மிரட்டி எழுதி வாங்கப்பட்டதாக கூறி வாதிக்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்பதும், வா.சா.ஆ.1 மிரட்டி எழுதி வாங்கப்பட்டதாக பிரதிவாதி தரப்பில், வாதி மீது சட்டப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்பதும் தெரியவருகிறது. எனவே, பிரதிவாதிகளின் எதிர்வழக்கான அடமான ஆவணம் மிரட்டி வற்புறுத்தி எழுதி வாங்கப்பட்டது என்ற சங்கதி பிரதிவாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

24. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் ஆகும். அந்த ஆவணத்தில் வாதி கையொப்பம் செய்யவில்லை. 4ம் பிரதிவாதி மட்டும் கையொப்பம் செய்துள்ளார். அந்த ஆவணத்தின் பின்பக்கத்தில் ரூ.50,000/—ம் பெற்றுக்கொண்டு வரவு வைக்கப்பட்டதாக விவரம் எழுதப்பட்டுள்ளது. மேற்படி, இரண்டு ஆவணங்கள் குறித்து பிரதிவாதி கண்ணன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேற்படி, கிரைய ஒப்பந்தம் மற்றும் செல் வரவு ஆகியவற்றில் சாட்சி கையொப்பம் செய்துள்ள நபர்களை பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. எனவே பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 தகுந்த சாட்சிகள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

25. வாதி தரப்பில் தாவா அடமான கடன் தொகையை திருப்பி செலுத்தும் படி பிரதிவாதி கண்ணனுக்கு வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 வரையிலான அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு தனது தகப்பனாருக்கு அனுப்பப்பட்டது என்பதையும் அதற்கு எனது தகப்பனார் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், 4ம் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணையில்

ஒப்புக் கொண்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையில் கூறியிருப்பது போல் கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டு அதற்காக அளிக்கப்பட்ட தொகைக்காக வற்புறுத்தி வா.சா.ஆ.1 எழுதப்பட்டிருந்தால் அந்த விவரங்களை கூறி பதில் அறிவிப்பு ஏன் அனுப்பப்படவில்லை என்பதற்கு பிரதிவாதிகள் தரப்பில் தகுந்த விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை. எனவே, பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் கூறியிருப்பது போல் கிரைய ஒப்பந்தம் 4ம் பிரதிவாதிக்கும், வாதிக்கும் ஏற்பட்டது என்பது நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

26. பி.வா.சா.ஆ.3 அடமான கடனுக்கு வட்டி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று எழுதப்பட்ட ஒப்பந்த முச்சலிக்கா என்று விவரம் கூறப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.3 அடமான கடனுக்கு வட்டி செலுத்த வேண்டியதில்லை. வட்டியை தள்ளுபடி செய்து அசல் தொகையை மட்டும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எழுதப்பட்ட ஒப்பந்த முச்சலிக்கா ஆகும். மேற்படி ஒப்பந்த முச்சலிக்காவை எழுதிய நபர் முனியாண்டி என்றும், அவரை பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.3ஆக விசாரணை செய்துள்ளார்கள். அவர் தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில், ஒப்பந்த முச்சிலிகாவை தான் எழுதியதாக கூறி இருக்கிறார். ஆனால், அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் வழக்கறிஞர் சொல்லி தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள விவரங்களை படித்து பார்த்து அதில் உள்ளபடி சாட்சியமளிக்க வழக்கறிஞர் சொன்னார். பி.வா.சா.ஆ.3 ஒப்பந்த முச்சிலிக்காவில் என்னுடைய கையொப்பம் இல்லை என்று பி.வா.சா.3 ஒப்புக் கொண்டுள்ளார். பி.வா.சா.ஆ.3 எழுதும்போது யார் யார் இருந்தார்கள் என்று என்னால் சொல்ல முடியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். ஒப்பந்த முச்சலிக்காவான பி.வா.சா.ஆ.3ல் சாட்சி கையொப்பம் செய்துள்ள பி.வா.சா.2 அண்ணாமலை தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், ஒப்பந்த முச்சிலிக்காவை யார் எழுதினார்கள் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 எழுதிய அதே தேதியில் ஒப்பந்த முச்சலிக்கா எழுதப்பட்டதா என்றால் அதன் பிறகு எழுதப்பட்டு இருக்கலாம் அது பற்றி எனக்குத் தெரியாது என்று சாட்சியம் அளித்திருக்கிறார். அடமான ஆவணம் எழுதப்பட்ட அதே தேதியில் ஒப்பந்த முச்சிலிக்கா எழுதப்பட்டதா என்று பி.வா.சா.2க்கு தெரியவில்லை என்பது அவரது சாட்சியத்தின் மூலம் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. ஒப்பந்தம் முச்சிலிக்காவை பத்திர எழுத்தரான முனியாண்டி எழுதினாரா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

27. பி.வா.சா.ஆ.3 ஒப்பந்த முச்சிலிகா குறித்து வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், 07.08.2003 அன்று வேறு ஒரு ஆவணம் மூலம் ரூ.60,000/-க்கு வட்டி தேவை இல்லை என்றும், அசல் மட்டும் கொடுத்தால் போதும் என்றும் தெரிவித்தேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு சொல்ல வேண்டிய அவசியம்

இல்லை என்று மறுத்துள்ளார். எனவே பி.வா.சா.ஆ.3ஐ நிரூபணம் செய்ய வேண்டிய கடமை பிரதிவாதிகளை சாரும். ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் ஒப்பந்த முச்சிலிக்கா உண்மையானது என்றும் வாதியால் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றும் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

28. வாதி தரப்பில் வாதம் செய்யும்போது வா.சா.ஆ.1 அடமான ஆவணம் எழுதும்போதே அசல் மட்டும் கொடுத்தால் போதும் வட்டி தேவையில்லை என்று குறிப்பிட்டு அடமான ஆவணம் எழுதியிருக்கலாம். ஆனால், வா.சா.ஆ.1 ஏற்பட்ட அதே தேதியில் அடமான கடனுக்கு வட்டி தேவையில்லை என்று, மற்றொரு ஆவணமாக பி.வா.சா.ஆ.3 ஒப்பந்த முச்சிலிக்கா எழுதவேண்டிய அவசியம் இல்லை என்று வாதம் செய்யப்பட்டது. மேற்படி வாதம் ஏற்க்கும்படி உள்ளது. ஏனென்றால் ஒப்பந்த முச்சிலிக்காவில் சாட்சி கையொப்பம் செய்த பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், அடமான பத்திரம் எழுதப்பட்ட அன்றே ஒப்பந்த முச்சிலிக்கா எழுதப்பட்டதா என்ற கேள்விக்கு அதன்பிறகு எழுதப்பட்டிருக்கலாம். அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். ஒப்பந்த முச்சிலிக்காவை எழுதியதாக கூறும் பி.வா.சா.3ன் கையொப்பம் ஒப்பந்த முச்சிலிக்காவில் இல்லை. அடமான ஆவணத்தை மிரட்டி எழுதி வாங்கியதாக எதிர்வழக்குரையில் விவரம் கூறியுள்ள நிலையில், ஒப்பந்த முச்சிலிக்கா எழுதப்பட்டது என்று பிரதிவாதிகள் கூறுவது ஏற்க்கும் வகையில் இல்லை.

29. பிரதிவாதிகள் தரப்பில் வாதம் செய்யும்போது பிரதிவாதி விவசாயி என்றும், அடமான ஆவணத்தில் பயிர் ஜீவனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்து விவசாய நிலம் என்றும், தமிழ்நாடு கடன் நிவாரண சட்டப்படி பிரதிவாதிகள் பயனடைய கூடிய நபர்கள் என்றும், வட்டியை 9% சதவீதமாக வழங்கவேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது. மேற்படி வாதம் ஏற்க்கும்படி இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. பிரதிவாதிகள் அடமான கடன் ஆவணம் மிரட்டி எழுதி வாங்கப்பட்டதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள். அது நிரூபணம் செய்யப்படவில்லை. அடமான ஆவண ஒப்பந்தத்தில் ஒப்புக்கொண்டுள்ள 24% ஆண்டு வட்டியை வாதி பெற உரிமை உண்டு என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. வாதிக்கு தாவா தொகை ரூ.2,28,000/-ம் அசல் தொகை ரூ.60,000/-த்திற்கு 6% பின்வட்டியும் கிடைக்கக்கூடியது என்று இந்த எழுவினா-1ற்க்கு தீர்வு காணப்படுகிறது.

**30. எழுவினா.2-ற்க்கான தீர்வு:-**

3. வாதிக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரம் என்ன?

வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய உடன் பிரதிவாதிகள் தாவா கடனை திருப்பி செலுத்தியிருந்தால், வாதிக்கு வழக்கு தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. பிரதிவாதிகள் வாதிக்கு வழக்கு தாக்கல் செய்யவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். எனவே வாதிக்கு வழக்கு செலவுத்தொகை

கிடைக்கக்கூடியது என்று இந்த எழுவினா எண்.2ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காணப்படுகிறது.

வாதியின் வழக்கு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** வாதிக்கு, பிரதிவாதிகள் தாவா அடமான கடன் அசல் மற்றும் வட்டித்தொகை ரூ.2,28,000/–மும் அசல் தொகை ரூ.60,000/–த்திற்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரை 6% வட்டியும், வழக்கு செலவுத்தொகையும் தீர்ப்பாணை தேதியிலிருந்து மூன்று மாதக் காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்று முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.03.27 17:36:48 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | திருமதி.சிவகாமி,(வாதி) |
| வா.சா.2 | திரு.ஆறுமுகம் |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 07.08.2003 | தேதியிட்ட வாதி பெயருக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமானப்பத்திரம் அசல். |
| வா.சா.ஆ.2 | 2.04.2012 | தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல். |
| வா.சா.ஆ.3 | 09.10.2014 | தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல். |
| வா.சா.ஆ.4 | 30.01.2015 | தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல். |
| வா.சா.ஆ.5 | 20.02.2015 | தேதியிட்ட வழக்கறிஞர் வேலூர் சத்துவாச்சாரி அஞ்சல் துறை அதிகாரியிடம் கொடுத்த புகார் மனு நகல். |
| வா.சா.ஆ.6 | 20.02.2015 | தேதியிட்ட மேற்படி அறிவிப்புக்க கொடுத்த பதில் நகல். |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:</u>**

பி.வா.சா.1 திரு.கே.வேலு,(4ம் பிரதிவாதி)

பி.வா.சா.2 திரு.அண்ணாமலை

பி.வா.சா.3 திரு.முனியாண்டி

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 03.05.2003 | தேதியிட்ட உடன்படிக்கை ஒப்பந்தம் அசல். |
| பி.வா.சா.ஆ.2 | 09.06.2003 | தேதியிட்ட ரூ.50,000/-ற்கு வைக்கப்பட்ட செல். |
| பி.வா.சா.ஆ.3 | 07.08.2003 | தேதியிட்ட அடமான ஒப்பந்த முச்சிலிக்கா. |

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.03.27 17:36:57 +0530

**சார்பு நீதிபதி,**

**ஆரணி.**